DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண். CC.47/2018

**prosecution witness: LW11 as PW-7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாயாராஜலட்சுமி | தொழில் | : | காவல் ஆய்வாளர், தேனி குற்றப்பிரிவு |
| க/பெ. | : | முருகன் | வயது | : | 44 |
| கிராமம் | : | தேனி | சமயம் | : | |
| தாலுகா | : | தேனி | | | |

(Solemnly Affimed in Accordance with provision of oath's act 1969)

**<u>10.06.2025</u>**

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் தற்சமயம் காவல் ஆய்வாளராக தேனி குற்றப்பிரிவில் பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 17.09.2017ம் தேதியன் பாம்பன் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது 09.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இந்திரன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது கிரின்சன், த/பெ.அடைக்கலம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினைப் பெற்று அதன் தன்மைக்கேற்றவாறு நிலையக் குற்ற எண்.105/2017 பிரிவு.304(A) இதச கீழ் வழக்கு பதிவு செய்துள்ளார். சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இந்திரன் தற்போது இறந்துவிட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் மேற்சொன்ன சாட்சியத்தை அளித்தேன்.

புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து இராமேஸ்வரம் நீதித்துறை நடுவருக்கு சமர்ப்பித்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். பிற நகல்களை சம்பந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தும், இவ்வழக்கை நான் அன்றைய தினமே விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 10.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரெய்மண்ட், புனிதன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்துள்ளார் **பார்வை மகஜர் அ.சா.ஆ.5** ஆகும். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6** ஆகும்.

பின்பு சாட்சிகள் கிரின்சன், உயிர்த்தநாதன், ஆண்டனி பிரபு, சேசம்மாள், பாக்கியராஜ், ரெய்மண்ட், புனிதன் ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பெற்றேன்.

பின்பு 17.09.2017ம் தேதி இராமேஸ்வரம் அரசு மருத்துவமனை சென்று இறந்த அடைக்கலம் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள்

முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆகும்.**

பின்பு காவலர் த.கா.1821 திரு.முனியசாமி என்பவர் மூலமாக பிரேதத்தை பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக அனுப்பி வைத்தேன். பின்னர் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை அவர்கள் குடும்பத்தாரிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன்.

பின்னர் 17.09.2017 ம் தேதி 16.30 மணிக்கு இவ்வழக்கின் எதிரியை அக்காள்மடம் பஸ்ஸ்டாப் அருகே கைது செய்து நிலையம் கொண்டுவந்து நிலையப்பிணையில் விடுவித்துள்ளேன்.

பின்னர் 21.09.2017 ம் தேதி இவ்வழக்கில் எதிரியின் வாகனமான TN 48 Q 8679 என்ற வேனை மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.விஸ்வநாதன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த **மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.8** ஆகும்.

இவ்வழக்கில் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் மீனாகுமாரி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பதிவேடு பெற்றேன். அந்த **பிரேத பரிசோதனை சான்று அ.சா.ஆ.9 ஆகும்.** பின்பு சிறப்பு உதவி ஆய்வாளர் இந்திரன் என்பவரை 11.01.2018 ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

இறுதியாக தனது விசாரணையை முடித்து எதிரியின் மீது 11.01.2018 ம் தேதியன்று சட்டப்பிரிவுகள். 304(A) இதச படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

17.09.2017 ம் தேதி நண்பகல் 12.15 மணிக்கு போஸ்ட் மார்டம் நடந்தது என்றால் சரிதான். அன்றைய தினம் காலை 08.00 மணியிலிருந்து நான், உதவி ஆய்வாளர் திரு.இந்திரன் மற்றும் தலைமைக் காவலர் மருத்துவமனையில் தான் இருந்தோம் என்றால் சரிதான். சம்பவம் நடந்து ஒரு நாள் கழித்து தான் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். சம்பவம் தேசிய நெடுஞ்சாலையில் இறந்த நபர் மற்றும் அவரது மகன் ஆகியோர்கள் ரோட்டிற்கு வடக்கு பக்கமாகவா, தெற்கு பக்கமாகவா நடந்து சென்றார்கள் என்று விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மூன்று நபர்கள் வரிசையாக ரோட்டில் முன்னுக்கு பின்னாக சென்றார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட இறந்த நபர் தான் முதலாவதாக ரோட்டில் நடந்து சென்றார் என்றால் சரிதான். அவருக்கு பின்னால் தான் அவரது மகன் நடந்து சென்றார் என்றால் சரிதான். அப்படி என்றால் அவர் பின்னார் நடந்து சென்ற அவர் மகன் மீது தான் வந்த வாகனம் மோதியிருக்க வாய்ப்புள்ளது என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் 1 முதல் 7 சாட்சிகள் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் நிறைய கடைகள், வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகிலுள்ள யாரையும் இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். விபத்திற்குள்ளான வாகனத்தை சுமார் 5 நாட்கள் கழித்துதான் ஆய்வுக்கு அனுப்பினேன் என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சரியான பாதையில் சென்றதாக வரைபடத்தில் உள்ளது என்றால் சரிதான்.

விபத்து நடந்த நேரம் இரவு நேரம் என்பதால் விபத்து ஏற்படுத்திய வாகனம் எப்படி வந்தது என்று புகார்தாரரால் சொல்லமுடியாது என்றால் சரியல்ல. இறந்த நபர் இரவு நேரம் என்பதாலும், வயதானவர் என்பதாலும் பின்னால் வரும் வாகனத்தை கவனிக்காமல் ரோட்டைக் கடந்ததால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

இந்த வழக்கு சாட்சிகளை முறையாக புலன் விசாரணை செய்யாமல், பின்னிட்டு உறவினர்களை வைத்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி விபத்தானது எதிரியின் கவனக்குறைவால் ஏற்பட்டதல்ல என்றால் சரியல்ல.

ஒம்/–S.B. Sujith, B.A.,B.L.,(Hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.